நீதியை சரிகட்டும் தேவனே

O God Who Judges Righteously



Album 24 Song 2

Song 2 நீதியை சரிகட்டும் தேவனே

Psalm 94 – Cry for God to rise and bring justice against the wicked who crush God's people, kill widows and orphans, and think God does not see. Affirmation that the Lord will not abandon His inheritance.

நீதியை சரிகட்டும் தேவனே
நீதியை சரிகட்ட பிரகாசியும்
பூமியின் நியாயத்தை தீர்ப்பவரே
பெருமைக்காரருக்கு பதிலளியும்

துன்மார்க்கர் எதுவரைக்கும் மகிழ்ந்திருப்பர்?
துன்மார்க்கர் எதுவரைக்கும் களிகூருவர் ?
அக்கிரமக்காரர் எதுவரைக்கும் வாயாடுவர் ?
அங்கிரமக்காரர் எதுவரைக்கும் பெருமை பாராட்டுவர்?

மூடரே, எப்பொழுது புத்திமான்களாகுவீர்?
மிருக குணமுள்ளவரே, எப்பொழுது உணர்வடைவீர்?
காதை உண்டாக்கினவர் கேளாமல் போவாரோ?
கண்ணை உருவாக்கினவர் காண மாட்டாரோ?

மூடரே, எப்பொழுது புத்திமான்களாகுவீர் ?
மிருககுணமுள்ளவரே எப்பொழுது உணர்வடைவீர்?
ஜனங்களை தண்டிக்கிறவர் கடிந்து கொள்ளாரோ?
மனுஷனுக்கு அறிவை போதிக்கும் கர்த்தர்
அறியாரோ?

நீதியை சரிகட்டும் தேவனே
நீதியை சரிகட்ட பிரகாசியும்
பூமியின் நியாயத்தை தீர்ப்பவரே
பெருமைக்காரருக்கு பதிலளியும்

உமது ஜனத்தை நொறுக்குகின்றனர்
உமது சுதந்தரத்தை ஒடுக்குகின்றனர்
விதவையையும் பரதேசியையும் கொன்றுப் போட்டனர்
திக்கற்ற பிள்ளைகளை கொலை செய்து புதைத்தனர்

நீதியை சரிகட்டும் தேவனே
நீதியை சரிகட்ட பிரகாசியும்
பூமியின் நியாயத்தை தீர்ப்பவரே
பெருமைக்காரருக்கு பதிலளியும்

நியாயத்தை நீதியிடமாய் திரும்பச் செய்திடும்
உம்முடைய ஆறுதலால் ஆத்மாவைத் தேற்றிடும்.
கர்த்தர் ஜனத்தை நெகிழவிடமாட்டார்
தமது சுதந்தரத்தை கைவிடவே மாட்டார்

நீதியை சரிகட்டும் தேவனே
நீதியை சரிகட்ட பிரகாசியும்
பூமியின் நியாயத்தை தீர்ப்பவரே
பெருமைக்காரருக்கு பதிலளியும்

